# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | திருவருகைக்காலம் மூன்றாம் ஞாயிறு | 14 டிசம்பர் 2025


**எதிர்நோக்கிய திருப்பயணிகளாகக் கொண்டாடுதல், செவிமடுத்தல், மற்றும் பயணித்தல்**



மாதாந்திர நோக்கம் மற்றும் கருப்பொருள்:

திருஅவை (இரக்கமுள்ளது)

சார்பு உணர்வை வளர்க்கவும், நற்செய்தியை அறிவிக்க அதிகாரம் அளிக்கவும் அழைப்பு

# மகிழுங்கள்.

## ஆண்டவர் அண்மையில் உள்ளார்

கௌடாட்டே - மகிழ்ச்சியின் ஞாயிறைக் கொண்டாடும் இவ்வேளையில் இன்றைய வாசகங்கள் எதிர்ப்பார்ப்பிலிருந்து மகிழ்ச்சிக்கு மாறுகின்றன. எனவே எசாயா புத்தகத்திலிருந்து இப்போது வாசகங்களைப் பார்ப்போம். இது உருமாற்றத்தின் காட்சிகளையும் துயரத்தின் முடிவையும் நம்முன் காட்டுகிறது. முதல் வரியில் பாலைவனம் பூத்துக்குலுங்குவதையும் மீட்பின் மகிழ்ச்சியையும் பிரதிபலிக்கிறது. மனிதகுலத்தின் குணமளித்தலை நாம் வாசிக்கின்றோம். மீட்பரின் வருகைக்காக ஒரு நெடுஞ்சாலை தயாராகிவருவதைப் பற்றி நற்செய்திகள் எடுத்துரைக்கின்றன. ஆண்டவர் முழுமையான மாற்றத்தை உறுதியளிப்பதால், நிலையான மகிழ்ச்சி உள்ளது என்று உறுதியளிக்கிறது.

இருந்தபோதும், சிறையில் இருந்த திருமுழுக்கு யோவான் தன்னுடைய சீடர்கள் மூலம் இதயத்தை நொறுக்கும் ஒரு கேள்வியைக் கேட்கிறார். ‘வரவிருப்பவர் நீர்தாமா?’ இயேசுவின் பதில் அவருடைய செயல்களில் உள்ளது. இயேசு இவ்வாறு கூறுகிறார். “நீங்கள் கேட்பவற்றையும் காண்பவற்றையும் யோவானிடம் போய் அறிவியுங்கள். பார்வையற்றோர் பார்வை பெறுகின்றனர்; கால் ஊனமுற்றோர் நடக்கின்றனர்; தொழுநோயாளர் நலமடைகின்றனர்; காது கேளாதோர் கேட்கின்றனர்; இறந்தோர் உயிர்பெற்று எழுகின்றனர். ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்கப்படுகிறது. யோவானின் எதிர்பார்ப்பு குறைந்துவிட்டதா? அவரும் ஒரு அரசியல் நோக்கம் கொண்ட மெசியாவை எதிர்பார்க்கிறாரா?

நம்மில் பலருக்கும் எதிர்ப்பார்ப்புகள் குறையும்போது, நம் மத்தியில் கடவுளின் உடனிருப்பை எவ்வாறு அடையாளம் காணமுடியும்? இயேசு மீட்பின் பணியில் யோவானின் பங்கை உறுதிப்படுத்தினார். அவர் உண்மையிலேயே மேலானவர், ஆனால் வாசலில் நின்று வாக்குறுதியை சுட்டிக்காட்டுகிறார். திருமுழுக்குப் பெற்ற கத்தோலிக்கர்களாகிய நாம் நம் மத்தியில் இறைவனின் அரசைக் கொண்டுள்ளோம். யோவான் அவருடைய பங்கைச் செய்தார். நாம் செய்யவேண்டியது என்ன?

திருத்தந்தையின் லாவ்டாதோ சி என்னும் சுற்றுமடலால் ஈர்க்கப்பட்டு மலேசியா-சிங்கப்பூர்-புருனை ஆயர்கள் மாநாடு படைப்பு நீதி ஆணையத்தை உருவாக்கியுள்ளது. இது சுற்றுச்சூழல் மேலாண்மை மற்றும் படைப்புக்கான நீதிக்கு அழைப்பு விடுக்கிறது. சுற்றுச்சூழல் சீரழிவை நிவர்த்தி செய்வதற்கான நடைமுறையை, சமூக அடிப்படையிலான நடவடிக்கைகளை ஊக்குவிக்கிறது. அடிமட்ட அளவில் (குடும்பங்கள், அதிச க்கள்) அனைவரும் தங்களுடைய பங்கைச் செய்யலாம். PROTEC என்னும் பிரச்சாரத்தில்(பூமியைப் பாதுகாப்போம், நம் குழந்தைகளைப் பாதுகாப்போம்) ஈடுபடவும், சுற்றுச்சூழல் அல்லது பசுமை திருஅவைகளின் உறுதிமொழியை ஆதரிக்கவும் நாம் ஊக்குவிக்கப்படுகிறோம்.

புனித யாக்கோபு தனது கடிதத்தில் ஆண்டவரின் நாள் வரும்வரையில் பொறுமையாக இருக்குமாறு கூறுகிறார். காத்திருக்கும்போது நாம் ஆண்டவரின் கரங்கள், கால்கள், மற்றும் குரலாக இருந்து நம்மால் முடிந்த இடத்தை அடைவோம். ஒரு சூழ்நிலையை மாற்ற நாம் செய்யும் ஒவ்வொரு முயற்சியாலும் மகிழ்ச்சியடைகிறோம். முதியோரை ஆற்றுப்படுத்துவதும், ஒரு உறவை ஒப்புரவாக்குவதும், புலம்பெயர்ந்தோருக்கு அக்கறை காட்டுவதும் போன்ற செயல்கள் இன்னும் நீண்டுகொண்டே போகும்.

என்னைத் தயக்கமின்றி ஏற்றுக்கொள்வோர் பேறுபெற்றோர்” என்று இயேசு கூறுகிறார். உண்மையில் நாம் அவரை ஏற்றுக்கொள்ள தயக்கம் காட்டவில்லை. ஏனென்றால் நாம் அவருடன் ஒன்றாக இருக்கிறோம். இங்கேயும் எப்போதும் அவரின் விண்ணக காட்சியைக் காண்கிறோம். ✣

> கடந்த காலத்தை
> கடவுளின் இரக்கத்திலும்,
> நிகழ்காலத்தை அவரின்
> அன்பிலும்,
> எதிர்காலத்தை அவரது
> பாதுகாப்பிலும்
> நம்பிக்கை வையுங்கள்.
>
> - புனித அகுஸ்தினார்

**இன்றைய இறைவார்த்தை:**

எசாயா 35: 1-6, 10

திருப்பாடல்: 146: 6-10

யாக்கோபு 5: 7-10

மத்தேயு 11:2-11


INTERNAL CIRCULATION ONLY
BUL 50/2025

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org